செ.வெ.எண்.304/2009, நாள்:16.09.2009

## காஞ்சிபுரம் தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் அமைப்புச்சாரா தொழிலாளர் நலவாரியம் கணிமயமாக்கும் திட்டத்தை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்

தமிழ்நாட்டில் தொழிலாளர் துறையின் கீழ் செயல்பட்டு வரும் காஞ்சிபுரம் கட்டுமானம் மற்றும் அமைப்புச்சாரா நலவாரியங்களின் பணிகளை, அண்ணா நூற்றாண்டு விழா நிறைவு நாளில் கணினி மயமாக்குதல் மற்றும் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சியினை 16.09.2009 அன்று காஞ்சிபுரத்தில் மாண்புமிகு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி கூடுதல் தொழிலாளர் ஆணையர் திரு.ப.கருப்பசாமி அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. கட்டுமானம் மற்றும் அமைப்புச்சாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு திட்டத்தின்கீழ் வாரியத்தில் பதிவு செய்துள்ள பயனாளிகளுக்கு விபத்து நிவாரண உதவி, இயற்கை மரண உதவி, ஈமச்சடங்கு உதவி, கல்வி உதவி, திருமண உதவி, மகப்பேறு உதவி, கண்கண்ணாடி உதவி தொகைகள் மற்றும் ஓய்வூதியம் ஆகிய நல திட்ட உதவிகள் அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்களில் 31.8.2009 வரை 2 லட்சத்து 89 ஆயிரத்து 568 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். இவர்களில் 25 ஆயிரத்து 151 பேருக்கு நலத்திட்ட உதவிகளாக ரூ.8 கோடியே 30 இலட்சத்து 59 ஆயிரத்து 592 வழங்கப்பட்டுள்ளது.

கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய உதவித் தொகை உள்ளிட்ட பயன்கள் விரைந்து கிடைத்திட அண்ணா நூற்றாண்டு விழா நிறைவு நாளில் நலவாரியங்களை கணினி மயமாக்கப்படும் என மாண்புமிகு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் சட்டப்பேரவையில் அறிவித்திருந்தார். கணினி மயமாக்கும் பணியினை செயல்படுத்தும் வகையில் காஞ்சிபுரம் மாவட்ட தொழிலாளர் அலுவலர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அலுவலகத்திற்கு 9 கணினிகள் வழங்கப்பட்டு அவை அகன்ற அலைவரிசை இணைப்பு மூலம் இணைக்கப்பட்டுள்ளது. இந்த கணினிகளை இயக்குவதற்கு பயன்பட்டு மென்பொருள் எல்காட் மூலம் உருவாக்கப்பட்டு, அப்பயன்பாட்டு மென்பொருள் சென்னை பெருங்குடியிலுள்ள எல்காட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாவட்ட தொழிலாளர் நலவாரிய அலுவலகம் கணினி மயமாக்கும் பயன்பாட்டுக்கு வருகிறது. இப்பயன்பாட்டு மென்பொருள் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் உருவாக்கப்பட்டுள்ளது.

கட்டுமானம் மற்றும் அமைச்சாரா தொழிலாளர்கள் நலவாரிய அலுவலகம் கணினி மயமாக்கம் செய்யப்படுவதன் மூலம் காகித பதிவேடுகள் பராமரிப்பதை விடுத்து உறுப்பினர்களின் விவரங்களை எளிதில் பெற இயலும். அமைப்புசாரா தொழிலாளர்களை பதிவு செய்வது, புதுப்பிப்பது மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குவது ஆகியவற்றை மிக விரைவாக செய்திட இயலும்.

தொடர்ந்து கைத்தறி தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளிகளுக்கு மகப்பேறு நலத்திட்ட நிதியுதவி காசோலைகளை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தொழிலாளர் இணை ஆணையர் திரு.ஆர்.மதன்மோகன், தொழிலாளர் துணை ஆணையர் திரு.ஆர்.ஆர்.ரவீந்திரன், தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் நலவாரிய செயலாளர் திரு.வே.ராஜா, மாவட்ட தொழிலாளர் ஆய்வர் திரு.ம.லஷ்மன், தொழிலாளர் துணை ஆய்வர்கள், தொழிலாளர் உதவி ஆய்வர்கள், பதிவு பெற்ற தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் அலுவலக பணியாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்